25



# அஜ்னபி மஹ்ரமி வரையறைகளைப் பேணிடுவோம்



மனிதன் தனித்து வாழ முடியாதவன். கூட்டு வாழ்வை மேற்கொள்ளும் இயல்புடையவன். தனித்து வாழும்போது இஸ்லாம் சுமத்தியுள்ள கடமைகள் எதனையும் அவனால் நிறைவேற்ற முடியாமற் போகும். சமூகக் கடமையான பர்ளு கிபாயாவை நடைமுறைப்படுத்துவது சாத்தியமற்றதாகிவிடும். எனவே கண்டிப்பாக சமூகத்தோடு சேர்ந்து வாழவும் உறவுகளைப் பலப்படுத்தவும் வேண்டிய தேவை உள்ளது. இவ்வாறு சேர்ந்து வாழும்போதும் தொடர்புகளைப் பலப்படுத்தும்போதும் பேணிக் கொள்ள வேண்டிய வரையறைகளை விளக்குவதற்காகவே அஜ்னபீ - மஹ்ரம் பற்றிய சட்டதிட் டங்கள் தேவைப்படுகின்றன.

முதலில் மஹ்ரம் என்ற சொல்லை நோக்குவோம். இச்சொல் மொழியில் ‘ஹராம்’ என்ற கருத்தைக் கொடுக்கின்றது, பரிபாஷையில் குடும்ப உறவின் காரணத்தால் அல்லது வேறு ஏதேனும் ஒரு காரணத்தால் ஒரு பெண்ணுக்கு நிரந்தரமாகவே திருமணம் முடிக்கத் தடைசெய்யப்பட்ட ஆணைக் குறிப்பதற்கு இச்சொல் பயன்படுகின்றது. பின்வரும் அட்டவணை ஆண்களுக்குத் திருமணம் முடிக்க தடைசெய்யப்பட்டவர்கள் (மஹ்ரம்கள்) பற்றிய தகவலைத் தருகிறது. இவர்களின் எதிர்ப்பாலார் பெண்களுக்கு மஹ்ரம்களாவர்.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள மஹ்ரம் என்ற பிரிவில் அடங்காத அனைவரும் அஜ்னபி என்ற பிரிவில் அடங்குவர். அஜ்னபி என்ற சொல்லுக்கு அந்நியமானவர், புதியவர், உறவினர் அல்லாதவர், தொடர்பற்றவர் போன்ற பல கருத்துக்கள் உள்ளன.

**குடும்ப உறவு**

- ★ *தாய், தாயின்தாய்*
- ★ *புதல்வி, மகனின் புதல்வி, மகளின் புதல்வி*
- ★ *சகோதரி, தந்தைவழி சகோதரி, தாய்வழி சகோதரி*
- ★ *தந்தையின் சகோதரி*
- ★ *தாயின் சகோதரி*
- ★ *சகோதரனின் புதல்வி, தாய்வழி சகோதரனின் புதல்வி, தந்தைவழி சகோதரனின் புதல்வி*
- ★ *சகோதரியின் புதல்வி, தாய்வழி சகோதரியின் புதல்வி, தந்தைவழி சகோதரியின் புதல்வி*

**பால்குடி உறவு**

★ பால் கொடுத்த தாய், அவளின் தாய்மார்கள், தந்தையின் தாய்

★ பால்குடி உறவிலான புதல்வி, மகளின் புதல்வி, மகனின் புதல்வி

★ பால்குடி உறவிலான சகோதரி, தாய்வழி சகோதரி, தந்தைவழி சகோதரி

★ பால் கொடுத்த தாயின் சகோதரி

★ பால்குடி உறவு தந்தையின் சகோதரி

★ பால்குடி உறவு சகோதரனின் புதல்வி

★ பால்குடி உறவு சகோதரியின் புதல்வி

**திருமண உறவு**

★ மனைவியின் தாய்

★ மனைவியின் புதல்வி

★ மகனின் மனைவி

★ தந்தையின் மனைவி

இனி நாம் திருமணம் முடிக்க அனுமதிக்கப்பட்டுள்ள அஜ்னபியான ஆண்களோடு பழகும்போது பேண வேண்டிய வரையறைகளை நோக்குவோம்.

**1.** பார்வையைத் தாழ்த்துதல்

அவ்ரத்தில் உள்ளடங்கும் உடற்பகுதியைப் பார்த்தல், இரசனையுடன் பார்த்தல், காரணமின்றி தேவையின்றி தொடர்ந்து பார்த்துக் கொண்டே இருத்தல் என்பவற்றிலிருந்து தவிர்ந்து கொள்ளல்

மூவரது கண்கள் நரகைக் காண மாட்டாது...

★ அல்லாஹ்வின் பாதையில் விழித்திருந்த கண்

★ அல்லாஹ்வின் அச்சத்தால் அழுத கண்

★ அல்லாஹ் தடை செய்தவற்றைப் பார்வையிடாது தவிர்த்துக்கொண்ட கண்"

**2.** பெண் அவ்ரத்தை முழுமையாக மறைக்கக் கூடிய வகையிலும், மரியாதையான அமைப்பிலும் ஆடை அணிந்திருத்தல்

**3.** நடை, உடை, பாவனை, பேச்சு போன்ற அனைத்திலும் இஸ்லாமிய ஒழுக்கங்களைப் பேணிக்கொள்ளல்


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

**4.** ஆண்களின் உணர்வுகளைத் தூண்டக்கூடிய அனைத்து விதமான காரியங்களிலிருந்தும் விலகியிருத்தல்: நறுமணம் பூசுதல், மிகுந்த அலங்காரங்களைக் கொண்ட ஆடைகளை அணிதல் போன்றன வீட்டிலிருக்கும்போது தடுக்கப்படவில்லை. ஆனால், பாதையில் செல்லும்போது சமூக சீரழிவுக்கு வழிவகுக்குமாதலால் அவை தடுக்கப்பட்டுள்ளன.

**5.** ஆண் - பெண் தனித்திருத்தலுக்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொள்ளக்கூடாது.

உங்களில் ஒருவர் ஓர் அந்நிய பெண்ணுடன் தனித்திருந்தால், அவர்கள் இருவருடனும் மூன்றாம் நபராக ஷைத்தான் காணப்படுகின்றான்" (பஸ்ஸார்) என்பது ஹதீஸாகும்.

**6.** சமூக நலனையும், தேவையையும் கருத்திற் கொண்டே இரு சாராரும் இணைகின்ற நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட வேண்டும். பெண்ணின் சுபாவத்திலிருந்து அவளைத் தூரமாக்கக் கூடிய வகையில் அவளுக்கு அவப் பெயரைத் தேடிக்கொடுக்கும் வகையில் அவளது அடிப்படைப் பணியிலிருந்து அவளை அப்புறப்படுத்தும் வகையில் ஆண் - பெண் சந்திப்புக்கள் இடம்பெறுவது அவ்விருவருக்கும் மட்டுமல்ல. முழு சமூகத்துக்குமே நாசத்தைத் தேடித்தரும்.

எமது நலனைக் கருத்திற்கொண்டு இஸ்லாம் எமக்கு வகுத்துத் தந்துள்ள இவ்வரையறைகளைப் பேணி, உறவுகளை உயிர்ப்பிக்க வேண்டும். அதுதான் உள்ளங்கள் உயிர்வாழக் காரணமாக அமையும்.

### பயிற்சி

1. ஆண் - பெண் கலந்துரையாடும்போது பேண வேண்டிய வரையறைகள் யாவை? அவ்வரையறைகளைப் பேணி வராமையால் சமூகத்தில் ஏற்படும் விபரீதங்களை எடுத்துக்காட்டுக.
2. வரையறைகளற்ற ஆண், பெண் தொடர்புகளினால் ஏற்பட்ட தீமைகள் மூன்றினை பத்திரிகை செய்திகள் மூலம் நிரூபித்துக்காட்டுக.
3. மஹ்ரமி அஜ்னபி வேறுபாட்டை சுருக்கமாக விளக்குக.